செ.வெ.எண் 05 நாள்: 02.07.2021

பெரம்பலூர் மாவட்டம்

**குழந்தை திருமணத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக தாய், தந்தையரை இழந்த குழந்தைகளின் மறுவாழ்வு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் குழந்தை திருமணம் தடுத்தல் மற்றும் கோவிட்-19 காரணமாக தாய் தந்தையரை இழந்த குழந்தைகளின் மறுவாழ்வு தொடர்பான மாவட்ட அளவிலான பணிக்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (02.07.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றின் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அனைத்து பள்ளிகளும் மூடப்பட்டு, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இணையதளத்தின் வாயிலாக கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்த கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக தங்கள் வீடுகளில் உள்ள பெண் குழந்தைகளுக்கு விரைவாக திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற அறியாமையாலும், பெண்கள் கல்வி கற்பதனால் ஏற்படும் முன்னேற்றம் குறித்த விழிப்புணர்வு இல்லாததாலும், உடல் மனம் பக்குவடையாத நிலையில் பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் முனைகின்றனர்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக குழந்தை திருமணங்கள் அதிகளவில் நடைபெறுவதாக வரப்பெற்ற தகவலை அடுத்து, அனைத்து அலுவலர்கள், சமூக நலத்துறை, குழந்தைகள் பாதுகாப்பு அலகு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கிராம அளவில் பணியாற்றுகின்ற சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இணைந்து நகரம் முதல் கிராம அளவில் உள்ள பெண் குழந்தைகளை கண்காணித்து அவர்கள் கல்வி பயில்வதை உறுதி செய்திடவேண்டும். பள்ளி ஆசிரியர்களும், மாணவிகள் இடைநிறுத்தம் ஆகாமல் தொடர்ந்து, கல்வி கற்று வருவதனை உறுதி செய்திட வேண்டும்.

பெண் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே திருமணம் செய்து வைப்பதால், எளிதில் உடல் நலிவுறவும், மனம் முதிர்ச்சி அடையாமல் பாதிப்பு அடையவும் வாய்ப்பு ஏற்படுகிறது, எனவே அனைவரும் இணைந்து குழந்தைகள் திருமணத்தை கட்டுப்படுத்தி பெண் குழந்தைகளின் எதிர்காலத்தினை சிறப்பான முறையில் அமைந்திட அனைவரும் உறுதி ஏற்றுக்கொள்ளவேண்டும். கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு முனைப்புடன் பணியாற்றி தங்களது பணியினை செவ்வனே செய்திட வேண்டும்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றின் காரணமாக தாய், தந்தையரை இழந்த குழந்தைகளின் மறுவாழ்விற்காகவும், பொருளாதார நெருக்கடியினை எதிர்காலத்தில் சந்திக்காமல் எளிதில் தங்களது வாழ்வினை வளமானதாக உருவாக்கிக் கொள்வதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதி வழங்கி வருகிறார்கள். அதனை பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கிடைக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். கொரோனா தொற்றின் காரணமாக உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளுக்கு மறு வாழ்வு ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். தற்போது 64 குழந்தைகளுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. கணவரை இழந்த குழந்தைகளுடன் உள்ள பெண்கள் சுயதொழில் தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

தன்னார்வலர்கள், அலுவலர்கள் தங்கள் பகுதியில் கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக தாய், தந்தையரை இழந்த 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் ஏதேனும் இருந்தால் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தினை தொடர்புகொண்டு தகவல் தெரிவித்து குழந்தைகளின் மேம்பாட்டிற்காக பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ,ப. அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் க. மதிவாணன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அருள்செல்வி, குழந்தைகள் நலக்குழு தலைவர் அய்யம்பெருமாள், ஒருங்கிணைந்த சேவை மைய நிர்வாகி கீதா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**